19.08.2025

அ.வ.எண். 225/2021

வா.சா.1 - பிரபாகரன், த/பெ. தெய்வசிகாமணி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 19.08.2025 is accordance with the provision of Act X of 3331

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் B.A.POLITICAL SCIENCE படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் நன்கு தெரியும் என்றால் ஆங்கிலம் சரியாக தெரியாது. தமிழ் தெரியும். ஆங்கிலம் படித்து புரிந்துகொள்வேனா என்றால் அவ்வளவாக இல்லை. வழக்குரை ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்குரையை எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள் நான் படித்து பார்த்தேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பூர்வீக சொத்து அது எங்களது குடும்பத்திற்கு சொந்தமானது என்று சொல்கிறேன். 1 ம் பிரதிவாதி எனது தந்தை, 2 ம் பிரதிவாதி எனது சகோதரி, 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் என் தகப்பனாரின் சகோதரிகள், 6 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதியின் மகன் ஆவார்.

2. வழக்கு சொத்தின் காலை எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியும். வழக்கு சொத்து என் தாத்தா ரங்கசாமி கவுண்டரின் அப்பா சென்னிமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவர் இறந்த போது என் தாத்தாவின் அம்மா மாராக்காள் பெயருக்கு ஆவணம் ஏற்பட்டது. 1949 ல் சென்னிமலை கவுண்டரின் வாரிசான மாராக்காளும், அவரது மகன்களான 1. அவிநாசியப்பன், 2. ரங்கசாமி, 3. சென்னிமலை கவுண்டர் மூன்று பேரும் பாகம் செய்து கொண்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சின்னியக் கவுண்டர் மகன் முத்துசாமியும், சின்னிய கவுண்டர் மகன் சென்னிமலை கவுண்டர் , பெரியாக் கவுண்டர் மகன் ரங்கக் கவுண்டர் மற்றும் சென்னிமலைக் கவுண்டர் மனைவி மாரக்காள் ஆகியோர் தான் பாகம் செய்து கொண்டனர் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நம் நால்வருக்கும் பாத்தியப்பட்ட அனுபவப்பட்ட

சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வேறு மூல ஆவணங்களோ, அல்லது பரம்பரையாக வந்த சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. டி-அட்டவணை சொத்து மாரக்காளுக்கு ஒதுக்கப்பட்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டர் மாராக்காளின் வாரிசுகள் பெயர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டி-அட்டவணை சொத்தில் கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.512/2 காலையில் 0.84 ஏக்கர் பூமியும், அதே காலையில் 0.06 ¾ பூமியும், 541 ம் நம்பர் காலையில் 2.46 ¼ பூமியும், ஆக மொத்தம் ஏக்கர் 3.37 சென்ட் பூமியும், அது போக பொது இடங்களில் பாத்தியமும் ஏற்படுத்தி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.2 ஆவணம் என் தாத்தா ரங்கசாமி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணத்தில், வா.சா.ஆ.1 பற்றி குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. ரங்கசாமிக்கு வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் கட்டுப்பட்டுள்ள சொத்துக்களில் 1/3 பாகம் பாத்தியம் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரங்கசாமியின் வாரிசுகளான 1ம் பிரதிவாதி, 3, 4, 5 பிரதிவாதிகளின் பெயர்கள் இந்த கிரய பத்திரத்தில் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரங்கசாமி குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் சொத்தை வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு இல்லை. கிரய தொகையில் வாரிசுகள் பணம் கொடுத்ததாக ரங்கசாமி குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

5. பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து கிரய பத்திரம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரங்கசாமிக்கு எந்தெந்த ஊர்களில் சொத்து இருந்தது என்றும், மேற்படி சொத்துக்களில் இருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்றும், அதை வைத்து இந்த வழக்கு சொத்து மற்றும் பிற சொத்துக்களை கிரயம் பெற்றார் என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் என் தகப்பனாரும் உழைத்து என் தாத்தா பெயரில் சொத்து வாங்கினார் என்று சொல்லியுள்ளேன்.

6. என் தகப்பனாருக்கு 71 வயதாகிறது, என் தகப்பனார் விவசாயம் செய்து

வருகிறார். என் தகப்பனார் என்ன வருமானம் ஈட்டி வருகிறார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தகப்பனார் 10 வயது முதல் விவசாயம் செய்து வருகிறார். வா.சா.ஆ.2 கிரய ஆவணம் ஏற்படும்போது என் தகப்பனாருக்கு 15 வயது இருக்கும் என்றால் இல்லை, 18 வயது இருக்கும். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் 3, 4, 5 பிரதிவாதிகள் ரங்கசாமியுடன் சேர்ந்து விவசாயம் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்னவாறு 3, 4, 5 பிரதிவாதிகளின் திருமணத்திற்காக 1ம் பிரதிவாதி எவ்வளவு கடன் தொகை ஏற்றுக்கொண்டார் என்றும், அதை திருப்பி செலுத்தியதற்கான விவரம் எதுவும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.2 கிரய ஆவணம் ரங்கசாமியின் சுய சம்பாத்தியத்தில் கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அது ரங்கசாமியின் தனிப்பட்ட சொத்து என்றால் தனிப்பட்ட குடும்ப சொத்து ஆகும். வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் நோக்கம் மற்றும் தன்மை பற்றி வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொத்து பற்றி சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணம் பற்றி வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லாததால் மேற்படி ஆவணம் ஏற்றுகொள்ளகூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.4 ஆவணம் தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து என் தாத்தா ரங்கசாமி 4ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 செல்லாத ஆவணம் என்றும், அது என்னை கட்டுப்படுத்தாது என்றும் நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் பற்றி எப்போது தெரிய வந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தெரியும். வா.சா.ஆ.4 ஆவணம் பற்றி தெரிந்து 4 வருடங்கள் ஆகிறது. என் தாத்தா ரங்கசாமி கவுண்டர் உயிருடன் இருந்த வரை வா.சா.ஆ.4 ஆவணத்தை எதிர்த்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாரும் வா.சா.ஆ.4 ஆவணத்தை எதிர்த்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி அதில் கண்ட சொத்தை என் தாத்தா சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றால் சுவாதீனம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.4 ஏற்பட்ட அன்றே சொத்தின் சுவாதீனத்தை என் தாத்தா 4ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நானும், என் தகப்பனாரும் ஒரே முகவரியில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான், வீடு தனித்தனியாக உள்ளது. எனது வழக்குரையில் நானும், என் தகப்பனாரும் தனியாக வசித்து வருகிறோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருக்கிறார். 2ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கு பற்றி தெரியும். 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் தான் வழக்கறிஞரை நியமனம் செய்து கொடுத்தேன் என்றால் இல்லை.

10. வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தை, வா.சா.ஆ.4 ஏற்பட்ட பிறகு என் தந்தையாகவே சென்று ரங்கசாமி கவுண்டர் ஏற்படுத்தியதாக என் தகப்பனாரே செட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஏற்படுத்தியவர் என்ற இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது என் தகப்பனாரின் புகைப்படம் தான். வாக்களார் அடையாள அட்டையும், என்னுடைய தகப்பனாருடையது. வா.சா.ஆ.4 ஆவணத்தை என் தகப்பனார் தான் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பதிவுத்துறையில் வா.சா.ஆ.5 ஆவணம் என் தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்டது என மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் ரத்து செய்யவில்லை, தவறானது என்று சொல்லியுள்ளனர்.

11. வா.சா.ஆ.5 ஆவணத்தை மேற்கோள்காட்டி வேறு எந்த ஆவணம் ஏற்படகூடாது என்று உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் 7வது பதிவில் என் தந்தையார் பெயரில் ஏற்பட்டதாக சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி **வில்லங்க சான்றிதழ் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வில்லங்க சான்றிதழில் கோவை மாவட்ட பதிவாளர் அவர்களின் ஆணை எண்.5522/ஆ/1/2021 நாள்.18.10.2021 ன் படி 7344/2011 ஆவணமானது போலி ஆவணம் என ஆணையிடப்படுகிறது. மேற்படி ஆணையின் படி 7344/2011 யை முன் பதிவு

ஆவணமாக கொண்டு ஆவணம் ஏதும் பதிவு செய்ய இயலாது என்று சான்றளிக்கப்படுகிறது என கண்டுள்ளது என்றால் சரிதான். அது தான் உத்தரவு என்று தெரிந்துகொண்டேனா என்றால் எங்கள் தரப்பு விளக்கத்தை கேட்காமல் ஒருதலைபட்சமாக உத்தரவிட்டுள்ளனர். நான் இந்த ஆவணத்தில் தரப்பினர் அல்ல என்றும், எனவே என்னுடைய பதிலை பதிவுத்துறை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை, என் தகப்பனார் செய்துள்ளார்.

12. வா.சா.ஆ.5 ஆவணத்தில் என் அத்தைக்கு ஏற்படுத்தி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் பக்கம் 2ல் தாவா சொத்தின் ஒரு பகுதி சுயார்ஜிதமாக கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரங்கசாமி கூட்டு குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து கிரயம் பெற்றார் என சொல்லவில்லை என்றால் சரிதான். நீண்ட கால அனுபவத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்டது செல்லாது என நான் மேற்படி ஆவணத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

13. வா.சா.ஆ.5 ஆவணத்தை என் தாத்தா, என் தகப்பனாருக்கு ஏற்படுத்தவில்லை என்றும், என் தகப்பனாரே ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் 4ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டிட அனுமதியோ அல்லது வீட்டு வரி ரசீதோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சுவாதீனத்தில் இருப்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான் தான் உரிமையாளர் என பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. நானும் ஒரு உரிமையாளர் என்று சொல்லியுள்ளேன்.

14. வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில், 4ம் பிரதிவாதி தான் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்றும், அவர் உரிமையாளர் என்ற முறையில் 6ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால்

சரிதான். சம்மந்தப்பட்ட அனைவரும் உரிமையாளர்கள் தான். வா.சா.ஆ.8 ஆவணம் செல்லாத ஆவணம் என இது வரை விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். ரங்கசாமி கவுண்டர் கர்த்தா என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. உரிய பரிகாரம் கோராமல் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான கூறுகள் வழக்கரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும், அதனால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் குறித்த வகை நிவாரணச்சட்டத்தின் கீழ் வருவதில்லை , என்பதாலும் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

15. வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்து விவரங்கள் முன் ஆவணங்களுடன் ஒத்துப்போகவில்லை என்றும், நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரங்களும் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரமும் இல்லை என்றும், எனக்கும் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur